திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, இந்தப் பாலம் மழையினால் அடித்துச் செல்லப்பட்டு திரும்ப அடைக்கப்பட்டது என்றாலும் அதற்குப் பக்கத்தில் ஓடுபாலமாக இருக்கக்கூடிய இடத்தில் தண்ணீர் தேங்குவதனால்—அது பழுதடைந்திருக்கிற நிலைமையினால் இனிமேலாவது அந்தப் பாலத்தை மாற்றி பக்கா பாலமாக அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒரு லட்சத்து 98 ஆயிரம் ரூபாய் செலவில் இப்போதுதான்—இரும்புத்தொட்டியோடு அந்தப் பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். கருப்பையா : ஒரு லட்சம் 98 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டிருப்பது இரும்புத் தொட்டிதான். இது குறுகலாக இருப்பதனால் தண்ணீர் வர போதுமான வழியில்லை. மழை காலத்தில் அதற்கு சிறிது தூரத்திலேயே திருமழபாடி சாலையில் இருக்கிற ஓடுபாலத்தில் தண்ணீர் தேங்கி இதை அடித்துப்போகும் நிலை ஏற்படுகிறது. ஆகவே இதனை பக்கா பாலமாகவே மாற்றி அமைக்கும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபோலத் திட்டம் இல்லை.

சோமனூர் ரயில் நிலையம் அருகில் சுரங்கப்பாதை.

*349 வினா : திரு. கே என். குமாரசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை ஜில்லா, பல்லடம் தொகுதி சோமனூர் ரயில்வே ஸ்டேஷன் பக்கம் உள்ள ரயில்வே கேட்டின் கீழ் சுரங்கப்பாதை அமைக்க சர்க்காருக்கு உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் என்றால் எப்பொழுது வேலை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அவ்வித திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : அந்த இடத்தில் லாரிகள், பஸ்கள், வண்டிகள் எல்லாம் போக நெருக்கடியாக இருக்கிறது. அரை மைல் தூரத்தில் ஒரு ரயில்வே பாலம் இருக்கிறது அதையாவது ரிப்பேர் செய்து பாலத்திற்கு அடியில் ரோடுபோட ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரயில்வே லைன்களுக்குக் கீழ் பாலம் அமைப்பது மத்திய சர்க்காரின் வேலையாகும். உறுப்பினர் தன் கருத்தை மத்திய சர்க்காருக்குச் சிபார்சு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்–விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. அவையுரிமைக் கேள்வி.

### பேரவைத் தலைமையால் அகற்றப்பட்ட ஆணையிடப்பட்ட பகுதியை "மறவன் மடல்" என்ற செய்தித்தாள் வெளியிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சித்தன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். "1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் தேதி அன்று திரு. ராமச்சந்திர துரை பேசிய பேச்சில் ஒரு பகுதியை

பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கி விட உத்தரவிட்டார்கள். அப்படி நீக்கப்பட்ட பகுதி "மறவன் மடல்" என்ற பத்திரிகையில் வந்திருக்கிறது, இது உரிமையை மீறிய செயலாகாதா?" என்று எழுப்பியிருக்கிறார்கள். நம் விதிகளின்படி இது உரிமையை மீறிய நிகழ்ச்சி தான். ஆயினும் நம்முடைய அவையில் 1965-லும், 1966-லும் இப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏற்பட்டபோது குறிப்பிட்ட அந்த பத்திரிகைகளின் மீது பேரவைத் தலைவர் அவர்களே நடவடிக்கை எடுத்துக் கொள்வதாகத் தீர்ப்பு அளித்திருக்கிறார். அதைப்போலவே இந்த நிகழ்ச்சி சம்பந்தமாக பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட பத்திரிகை மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வார் என்று அறிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராஜா அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதை நாளை மறு நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

## 4. ஒற்றிவைப்புத் தீர்மானம்

**"டிஃபென்ஸ் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஃபிஸியாலஜி அண்டு அலைடு ஸயன்ஸஸ்" என்ற நிறுவனத்தை சென்னையிலிருந்து டில்லிக்கு மாற்றுதல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் shifting of Defence Institute of Physiology and Allied Sciences from Madras to Delhi என்ற பொருள் குறித்து விவாதிப்பதற்காக இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது மிக முக்கிய மான நிகழ்ச்சியாக இருந்தாலும், மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த தாக இருக்கிற காரணத்தாலே இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

## 5. அறிவிப்பு

**திரு. எம். வி. பாலன் அவர்கள் குறிப்பிட்ட ஒரு காரியத்தைப்பற்றி ஆய்வு செய்ய துணைத்தலைவர் அறிவித்தபடி குழு அமைக்க தேவையில்லாத நிலை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, நேற்றைய தினம் மாண்பு மிகு உறுப்பினர் திரு. பாலன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, அவர்கள் இந்த அவையிலே இல்லாதவரைப் பற்றிக் கருத்துகள் கூறினார்கள் என்றும், அதனால் அதற்கு அவர் நேரடியாகப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அவர் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் எனக் கூறி, அதைப் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டி அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டு, பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ஒரு கமிட்டி அமைப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால், சட்டமன்ற நிகழ்ச்சிக் குறிப்புக்களைப் பார்க்கும்பொழுது சில நிலைமைகள் தெளிவாகின்றன. அந்தக் கமிட்டி அமைக்கவேண்டிய அவசியம் இல்லாத நிலைமை இருக்கிறது. அதைப்பற்றி இங்கே கூற விரும்புகிறேன். 1957-ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ம் தேதி இந்த மன்றத்தில் நிதிநிலை அறிக்கையை அந்நாள் நிதியமைச்சர் வைக்கும்பொழுது "கன்னியாகுமரிப் பகுதியைப் பொறுத்தவரை, அதைத் தனி ஜில்லாவாகவே வைத்துக் கொள்வதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத் தைச் சார்ந்த நாங்குனேரி தாலூக்காவை இம்மாவட்டத்திலிருந்து பிரித்து கன்னியாகுமரி மாவட்டத்துடன் சேர்க்கப்படும். அதன் பயனாக இரு மாவட்ட அதிகாரிகளுக்கும் வேலைச் சுமை ஓரளவு சமமாக்கப்படும்" என்று நிதிநிலை அறிக்கையிலே அது பிரிக்கப்படும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.